# பாராளுமன்ற செய்தி

செய்தி மடல்

7 வது தொகுதி

ஜனவரி 2021




01 சுகாதார வழிகாட்டல்களை முழுமையாகக் கடைப்பிடித்து பாராளுமன்ற செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுப்பு

02 எட்டு சட்டமூலங்களுக்கு கையொப்பமிட்டு சபாநாயகர் சான்றுரையளித்தார்

03 அர்ப்பணிப்புடன் இயங்கும் பாராளுமன்ற நிர்வாக திணைக்களம்

06 அமைச்சரவைத் தீர்மானங்கள் பற்றிய தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க அரச அதிகாரிகளுக்கு காணப்படும் அதிகாரம் குறித்து அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் கலந்துரையாடல்

07 2020இல் சட்டவாக்க சபையில் இடம்பெற்ற நிகழ்வுகள்

13 வெளிநாட்டு பணியாளர்களை மீண்டும் இந்நாட்டிற்கு அழைத்துவர வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடமுள்ள நிதியத்தை பயன்படுத்தவும் - கோப் குழு



தொடர்பாடல் திணைக்களம்
இலங்கை பாராளுமன்றம்



# சுகாதார விதிமுறைகளை முழுமையாகப் பாதுகாத்து பாராளுமன்ற செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுப்பு முன்னெடுப்பு

*கொவிட் 19 சவால்களுக்கு முகங்கொடுக்க சுகாதார அதிகாரிகளால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களை முழுமையாக பாதுகாத்து பாராளுமன்ற செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.*


இதற்கமைய பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சமூக இடைவெளியைப் பேணுவது, பாராளுமன்ற வளாகத்துக்குள் எந்நேரமும் முகக்கவசத்தை அணிந்திருப்பது, கைகளைக் கழுவது போன்ற சுகாதார வழிகாட்டல்களை உரிய முறையில் பின்பற்றுவது அவசியம் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இங்கு வலியுறுத்தியிருந்தார்.

அத்துடன், சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற அரசாங்க அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் அழைக்கப்பட்டு பின்பற்றப்பட வேண்டிய சுகாதார நடைமுறைகள் குறித்து ஆலோசனை பெறப்பட்டது. ஆபத்தான சூழ்நிலையொன்றும் பாராளுமன்றத்தில் இல்லையென்பதால் சுகாதார வழிகாட்டல் நடைமுறைகளைப் பின்பற்றி பாராளுமன்ற நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்க முடியும் என்பதே அவர்களின் நிலைப்பாடாக இருந்தது.

**“சமூக இடைவெளியைப் பேணுவது, பாராளுமன்ற வளாகத்துக்குள் எந்நேரமும் முகக்கவசத்தை அணிந்திருப்பது, கைகளைக் கழுவது போன்ற சுகாதார வழிகாட்டல்களை உரிய முறையில் பின்பற்றுவது அவசியம் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இங்கு வலியுறுத்தியிருந்தார்”**

அதேநேரம், பாராளுமன்ற பணியாளர்கள், பாதுகாப்புப் படையினர் மற்றும் ஒன்றிணைந்த சேவைகளின் பணியாளர்கள் 1400ற்கும் அதிகமானவர்கள் இதுவரை பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். மூன்று சந்தர்ப்பங்களில் இப்பரிசோதனை பாராளுமன்ற வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# எட்டு சட்டமூலங்களில் கையொப்பமிட்டு சான்றுரைப்படுத்தினார் சபாநாயகர்






***அரசியலமைப்பின் 79வது சரத்துக்கு அமைய 08 சட்டமூலங்களில் 2021 ஜனவரி 08ஆம் திகதி தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தியிருப்பதாக சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் அறிவித்தார்.***

இதற்கமைய தொழில் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டமூலம், பெண்களையும் இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தச்) சட்டமூலம் உள்ளிட்டவை இதில் அடங்குகின்றன.

அத்துடன், நீதி அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம், வர்த்தக அமைச்சினால் முன்வைக்கப்பட்ட புலமைச் சொத்து (திருத்தச்) சட்டமூலம், என்பனவும் சபாநாயகரினால் சான்றுரைப்படுத்தப்பட்டுள்ளன. பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்த) சட்டத்தின் ஊடாக வேலைக்கு பாடசாலைக் கப்பல்கள் மற்றும் பயிற்சிக் கப்பல்களில் தொழிலுக் கமர்த்துவதற்கான குறைந்தபட்ச வயது பதினைந்து வயதிலிருந்து பதினாறு வயதாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பதினான்கு வயதை எய்தியுள்ள ஆனால் பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆட்கள் இளம் ஆட்கள் எனக் கொள்ளப்படும்.

குறைந்தபட்ச வேதனங்கள் (இந்தியத் தொழிலாளர்கள்) (திருத்தச்) சட்டத்தின் ஊடாக பெருந்தோட்டங்களில் சிறுவர்களைத் தொழிலுக்கு அமர்த்தும் ஆகக் குறைந்த வயது 16 ஆக உயர்த்தப்பட்டிருப்பதுடன், பெண் தொழிலாளர்களுக்கு ஆகக்குறைந்த வேதனத்தை செலுத்துவதற்கான வயது 15 இற்குப் பதிலாக 16 ஆக அதிகரிக்கப்பட்டது. கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டத்தின் ஊடாகப் பணியாற்றக்கூடிய ஆகக்குறைந்த வயது 14இல் இருந்து 16ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அத்துடன் 1942ஆம் ஆண்டு 45ஆம் இலக்க கைத்தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டம் இளம் ஆட்களின் விடயத்தில், ஊழியக்காலப் பகுதி ஏதேனும் நாளில் பன்னிரண்டு மணித்தியாலங்களை விஞ்சாதிருத்தல் வேண்டும் என்பதுடன், மு.ப. 6 மணிக்கு முன்னர் தொடங்குவதாகவோ பி.ப. 8 மணிக்குப் பின்னர் முடிவடைவதாகவோ இருத்தலாகாது அத்துடன் வாரத்தில் ஒரு நாளில் ஊழியக் காலப்பகுதி பி.ப. 1 மணியுடன் முடிவடைதல் வேண்டும் என்பதாகும். இதில் இளைஞர் என்பதன் வயது 16இல் இருந்து 18 ஆக மாற்றப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலங்கள் யாவும் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட்டன.

சிறப்புக் கட்டுரை

# அர்ப்பணிப்புடன் இயங்கும் பாராளுமன்ற நிர்வாக திணைக்களம்



***நிறுவனமொன்றின் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மனிதவளம் என்பது முக்கிய காரணியாகும். பாராளுமன்ற நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல பங்களிக்கும் மனித வளம் தொடர்பான அனைத்து பொறுப்புகளையும் நிர்வாக திணைக்களமே ஏற்கின்றது.***

பாராளுமன்ற நிர்வாக திணைக்களத்தின் பணிப்பாளர் சுசந்த வைத்தியரத்ன அவர்கள் நிர்வாக திணைக்களத்தின் பொறுப்புகள் தொடர்பில் கீழ்வருமாறு தெளிவுபடுத்தினார்.

> "அனைத்து பாராளுமன்ற பணியாளர்களினதும் நியமனங்களை வழங்குவது முதல் ஓய்வு பெறும் வரையான அனைத்து விடயங்களையும் மேற்கொள்வது நிர்வாக திணைக்களத்தின் மூலமாகும். அதாவது நியமனம் வழங்குதல், பதவி உயர்வு வழங்குதல், விடுமுறைகளை பரிசீலனை செய்தல், ஓய்வு பெறுவதற்கான ஆவணங்களை தயாரித்தல், பணியாளர்களுக்கான போக்குவரத்துவசதிகளை மேற்கொள்ளுதல் போன்ற அனைத்து விடயங்களும் நிர்வாக திணைக்களத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றன".

> "உண்மையிலேயே நாட்டின் சட்டவாக்கத்தை மேற்கொள்ளும் உயர் ஸ்தாபனமான பாராளுமன்றத்தின் பணிகளை செயல்திறனாகவும் முறையாகவும் மேற்கொள்ள நிறுவனத்தின் மனித வளத்தை முறையாக பயன்படுத்துவது அவசியமானதாகும். இது ஒரு பாரிய பொறுப்பாகும். நிர்வாக திணைக்களம் என்ற வகையில் நாம் அந்த பொறுப்பை சரியான முறையில் மேற்கொள்கிறோம்".

விசேடமாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சேவைகளை வழங்குவதும் நிர்வாக திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பாகும். இந்த அனைத்து நடவடிக்கைகளையும் முறையாக மேற்கொள்ள பாராளுமன்ற நிர்வாகத் திணைக்களத்தில் 06 பிரிவுகள் காணப்படுகின்றன.

தாபன அலுவலகம், உறுப்பினர் சேவைகள் அலுவலகம், போக்குவரத்து அலுவலகம், ஆவணமாக்கல் பிரிவு, மனித வள அபிவிருத்தி அலுவலகம் மற்றும் ஆவணங்கள் காப்பகம் ஆகியன அந்த 06 பிரிவுகளுமாகும்.

வெற்றிடங்களுக்கு தேவையான பணியாளர்களை நியமிப்பதற்கான அறிவித்தல்களை வெளியிடுதல் முதல் தேவையான பரீட்சைகள், நேர்முகப்பரீட்சைகளை நடாத்தி அவ்வாறு நியமிக்கப்படும் பணியாளர்களின் தனிப்பட்ட



திரு.சுசந்த வைத்தியரத்ன
பணிப்பாளர்
நிர்வாக திணைக்களம்







கோப்புக்களைப் பராமரித்தல் என்பன தாபன அலுவலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும். அதேபோன்று பணியாளர்களின் சம்பள உயர்வு, காப்புறுதி, கடன் வசதிகளை பெற்றுக்கொள்வது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் பாராளுமன்ற பணியாளர்களின் ஆலோசனை குழுவின் அறிக்கைகளை சரியான முறையில் பேணுவதும் இடம்பெறுகின்றது.

உறுப்பினர் சேவைகள் அலுவலகம் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சேவைகளை வழங்குவது தொடர்பில் செயற்படுகின்றது. விசேடமாக சபாநாயகர் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை முகாமைத்துவம் செய்தல் மற்றும் பராமரித்தல், மாதிவலை வீட்டுத்திட்டத்திலுள்ள வீடுகளை உரிய முறையில் உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளித்தல், அவற்றின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதும் உறுப்பினர் சேவைகள் அலுவலகத்தின் ஊடாகவாகும்.

அதேபோன்று, நுவரெலியாவில் அமைந்துள்ள சேனாதிபதி இல்லத்தை உறுப்பினர்களுக்கு ஒதுக்கிக் கொடுத்தல், உறுப்பினர்களுக்கு தேவையான உபகரணங்களை வழங்குதல், உறுப்பினர்களின் காப்புறுதி விடயங்களை ஒருங்கிணைத்தல், உறுப்பினர்களின் தனிப்பட்ட பணியாளர்களை ஒருங்கிணைத்தல் போன்ற பணிகளும் உறுப்பினர் சேவைகள் அலுவலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

போக்குவரத்து அலுவலகத்தின் ஊடாக சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தலைவர் ஆகியோருக்கான உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்குதல், அவற்றை பராமரித்தல், தேவையான எரிபொருளை வழங்குதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றது. அதேபோன்று செயலாளர் குழாம் மற்றும் திணைக்கள தலைவர்களுக்கு தேவையான உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்குவதும் போக்குவரத்து அலுவலகத்தின் மூலமாகும். விசேடமாக முழு பணியாளர்களுக்குமான போக்குவரத்து வசதிகளை வழங்குவது தொடர்பான முழுமையான பொறுப்பு போக்குவரத்து அலுவலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, கொழும்பு மாவட்டத்தில் காலையில் பணியாளர்களை சேவைக்கு அழைத்துவருத்தல் மற்றும் கடமை முடிந்த பின்னர் மீண்டும் வீடுகளுக்கு செல்வதற்கான போக்குவரத்து வசதிகளை வழங்குவதும் போக்குவரத்து அலுவலகமாகும்.

அந்தந்த திணைக்களங்களின் கோரிக்கைகளுக்கு அமைய அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு அனுப்பப்படாத அனைத்து ஆவணங்களையும் புத்தகங்களாக கோர்த்தல் மற்றும் அச்சிடுதல் நடவடிக்கைகளை ஆவணமாக்கல் பிரிவினால் மேற்கொள்ளப்படும்.

அதேபோன்று ஆவணக்கப்பாகம் மூலம் பாராளுமன்றத்தின் அனைத்து திணைக்களங்களினதும் ஆவணங்களை களஞ்சியப்படுத்தல் இடம்பெறுகின்றது.

> “இவ்வாறு நிர்வாக திணைக்களம் தற்பொழுது பாராளுமன்ற பணிகளுக்காக சேவைகளை வழங்கிவருகின்றது. விசேடமாக கடந்த காலம் முதல் தனியான ஒரு திணைக்களக்களமாக நிர்வாக திணைக்களம் காணப்படுகின்றது. பின்னர் மேலும் சில திணைக்களங்கள் உருவாகியுள்ளன. உண்மையில் நிர்வாக திணைக்களத்தின் பணிகளை பரவலாக்கம் செய்வதன் மூலமே இந்த திணைக்களங்கள் உருவாகியுள்ளன. எனினும், நிர்வாக திணைக்களம் அனைத்து பணியாளர்களுக்கும் தொடர்புடைய பணிகளில் அதிகபட்சமாக ஈடுபடுகின்றது”. என சுசந்த வைத்தியரத்ன மேலும் கருத்து தெரிவித்தார்.

*ஆசிரி ஹபுகொட*
*ஊடக அதிகாரி*
*தொடர்பாடல் திணைக்களம்*

# தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை, தென்னை பயிர்ச்செய்கை சபை மற்றும் இலங்கை தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் கோப் குழு முன்னிலையில்



***தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை, தென்னை பயிர்ச்செய்கை சபை மற்றும் இலங்கை தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் ஆகியன அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) முன்னிலையில் அழைக்கப்பட்டது.***

கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்த, பாராளுமன்ற உறுப்பினர்களான பாட்டலி சம்பிக ரணவக்க, இரான் விக்ரமரட்ன, பிரேம்நாத் சி. தொலவத்த, சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகியோரும், அரசாங்க அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இதற்கு மேலதிகமாக 40ற்கும் மேற்பட்ட அரசாங்க அதிகாரிகள் Zoom தொழில்நுட்பத்தின் ஊடாக கோப் குழுவின் கலந்துரையாடல்களில் இணைந்துகொண்டனர்.

இந்த மூன்று நிறுவனங்களிலும் காணப்படும் பதவி வெற்றிடங்கள், தெங்கு கைத்தொழிலுக்கான நிவாரணங்களை வழங்குதல், தெங்கு சார்ந்த உற்பத்திகளை உலக சந்தையில் மேம்படுத்துதல், தென்னை பயிர்ச்செய்கை சபையின் செயற்றிட்டமான "பாசிக்குடா பொல் உயன" செயற்றிட்டம், நீர்கொழும்பு விதை பிரிவுக்கு புதிய கட்டடமொன்றை அமைத்தல், தென்னை பயிர்ச்செய்கை சபையின் பெருந்தோட்ட சக்தி மனிதவளத் திட்டம், தெங்கு சார்ந்த உற்பத்திகளின் தரங்களை பரிசீலித்தல், தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தனது பிரசார நடவடிக்கைகளுக்காக 9 மில்லியன் ஸ்டிக்கர்களை அச்சிட்டமை, தென்னங் காணிகள் கூறுபோடப்படுத்தல், மரங்களை வெட்டுவது தொடர்பான சட்டம், வருடாந்த தேங்காய் விளைச்சல் குறித்து தகவல்கள், தென்னை பயிர்களைப் பாதிக்கும் வண்டுகள் மற்றும் சித்தாக்கங்களைக் கட்டுப்படுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் குழுவில் உரையாடப்பட்டது.



# அமைச்சரவைத் தீர்மானங்கள் பற்றிய தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க அரச அதிகாரிகளுக்கு காணப்படும் வாய்ப்புக்கள் குறித்து அரசாங்க கணக்குகள் பற்றிய குழு கலந்துரையாடல்



***சிக்கலான விடயங்கள் தொடர்பில் எடுக்கப்படும் அமைச்சரவைத் தீர்மானங்கள் குறித்து தமது நிலைப்பாடுகளை முன்வைக்க அரசாங்க அதிகாரிகளுக்கு காணப்படும் வாய்ப்புக்கள் தொடர்பில் கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என அரசாங்க கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டது.***

விவசாய அமைச்சுக்காகத் தனியாரின் கட்டடமொன்று வாடகைக்கு எடுக்கப்பட்டமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கை, அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் கலந்துரையாடலுக்கு எடுக்கப்பட்டபோது இக்குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரன இந்தப் பரிந்துரையை முன்வைத்தார்.

கொள்முதல் நெறிமுறைக்கு எதிராகவும், வெளிப்படைத் தன்மை இன்றியும், அரசாங்க மதிப்பீட்டாளர்களின் மதிப்பீட்டுப் பெறுமதிக்கு அதிகமாகவும் சென்று அரசாங்க நிதியில் 1524 மில்லியன் ரூபா செலவில் விவசாய அமைச்சுக்காக தனியார் ஒருவரின் கட்டடத்தை வாடகைக்குப் பெற்றுக் கொண்டமை தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் இக்குழுவில் கலந்துரையாடப்பட்டது. கடந்த அரசாங்கத்தின் காலத்தில் அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் குழுவில் வெளிப்பட்டதுடன், இது தொடர்பில் அமைச்சு மட்டத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக புதிய விவசாய அமைச்சின் செயலாளர் சுமேதா பெரேரா இங்கு தெரிவித்தார்.

இதுபோன்ற நிகழ்வுகள் எதிர்காலத்தில் இடம்பெறாது தவிர்ப்பதற்கு ஒழுங்குமுறையொன்று வகுக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் குழு விரிவாகக் கலந்துரையாடியது. இதற்காகப் புதிய ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கை தயாரிக்கப்பட வேண்டியது பற்றியும் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் அமைச்சர் உதய கம்மன்பில, இராஜாங்க அமைச்சர்களான லசந்த அழகியவண்ண, துமிந்த திஸாநாயக்க, வைத்தியகலாநிதி சுதர்ஷினி பெர்னாந்துபுள்ளே, பாராளுமன்ற உறுப்பினர்களான பீ.வை.ஜி.ரத்னசேகர, வைத்தியகலாநிதி உபுல் கலப்பதி, வீரசுமன வீரசிங்ஹ, திஸ்ஸ அத்தனாயக்க, பேராசிரியர் ரஞ்சித் பண்டார, புத்திக பத்திரன மற்றும் எஸ்.சிறிதரன் ஆகியோரும், அரசாங்க அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.



**சிறப்புக் கட்டுரை**

# 2020 ஆண்டு சட்டவாக்க சபையில் இடம்பெற்ற நிகழ்வுகள்





***2020 ஜனவரி மாதம் 03ஆம் திகதி வெள்ளிக்கிழமை அரசியலமைப்பின் 70வது சரத்துக்கு அமைய பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, 2019 நவம்பர் மாதம் 17ஆம் திகதி ததேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி அதிமேதகு கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால் முற்பகல் 10.00 மணிக்கு எட்டாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டு, அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரை முன்வைக்கப்பட்டது.***

அன்றையதினம்

- ☐ பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ டீ.ரஞ்சித் டி.சொய்சா அவர்கள் 2019ஆம் ஆண்டு டிசம்பர் 04ஆம் திகதி மறைந்த பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு கௌரவ உடகம லியனகே வருண பிரியந்த லியனகே அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக, சபாநாயகர் கௌரவ கரு ஜயசூரிய முன்னிலையில் பதவிச் சத்தியம் செய்துகொண்டார்.

- ☐ பாராளுமன்ற சபை முதல்வர் பதவிக்கு கௌரவ தினேஷ் குணவர்த்தன அவர்களும்,

- ☐ பாராளுமன்ற ஆளும் கட்சியின் முதற்கோலாசானாக கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து அவர்களும் நியமிக்கப்பட்டிருப்பதாகவும்,

- ☐ எதிர்க்கட்சித் தலைவராக கௌரவ சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுவதாகவும் பாராளுமன்றத்தின் சபாநாயகர் கௌரவ கரு ஜயசூரிய அவர்களினால் அறிவித்தல் விடுக்கப்பட்டது.

**2020 ஜனவரி மாதம் 09ஆம் திகதி வியாழக்கிழமை** முன்னாள் பிரதமரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் கௌரவ தி.மு.ஜயரட்ன தொடர்பில் அனுதாப பிரேரணை குறித்த விவாதம் நடத்தப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டது.

**2020 ஜனவரி மாதம் 22ஆம் திகதி புதன்கிழமை** பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரட்ன அவர்கள் 2020 ஜனவரி மாதம் 20ஆம் திகதி முதல் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவிக்கும் கடிதம் பாராளுமன்ற செயலாளர் நாயகம் திரு. தம்மிக்க தஸநாயக்கவினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

**2020 ஜனவரி மாதம் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை** பாராளுமன்ற உறுப்பினர் அமரர் டீ.ரஞ்சித் டி.சொய்சா தொடர்பான அனுதாபப் பிரேரணை குறித்த விவாதம் நடத்தப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டது.

**2020 பெப்ரவரி மாதம் 05ஆம் திகதி புதன்கிழமை** கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரட்ன அவர்கள் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு கௌரவ வலிகொடகே சமன் ரத்னப்பிரிய அவர்கள் பாராளுமன்ற சபாநாயகர் கௌரவ கரு ஜயசூரிய

முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவிச் சத்தியம் செய்துகொண்டார்.

**2020 மார்ச் மாதம் 02ஆம் திகதி திங்கட்கிழமை**
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி அதிமேதகு கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் அரசியலமைப்பின் 70வது சரத்தின் கீழ் அன்றையதினம் நள்ளிரவு முதல் எட்டாவது பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

**2020 ஓகஸ்ட் மாதம் 05ஆம் திகதி புதன்கிழமை**
ஒன்பதாவது பாராளுமன்றத்துக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது.

**2020 ஓகஸ்ட் மாதம் 08ஆம் திகதி சனிக்கிழமை**
22 தேர்தல் மாவட்டங்களைப் பிரதிநிதித்துவம் செய்து ஒன்பதாவது பாராளுமன்றத்துக்குப் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் 196 பேரின் பெயர்கள், 1981ஆம் ஆண்டு 1ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல் சட்டத்தின் 62வது சரத்துக்கு அமைய தேர்தல்கள் ஆணைக்குழுவினால் 2020 ஓகஸ்ட் 08ஆம் திகதி திகதி 2187/26ஆம் இலக்க வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டது.

**2020 ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி திங்கட்கிழமை**
அரசியலமைப்பின் 99 (அ) சரத்தின் கீழ் ஒன்பதாவது பாராளுமன்றத்திற்காக தேசியப் பட்டியலின் ஊடாகத் தெரிவுசெய்யப்பட வேண்டிய 29 உறுப்பினர்களில் 19 உறுப்பினர்களின் பெயர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் 2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி 2188/2 இலக்க வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டது.

**2020 ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி வியாழக்கிழமை**
பொதுத் தேர்தலின் பின்னர் -

- ☐ அரசியலமைப்பின் 42 (4) சரத்தின் கீழ் 2020 ஓகஸ்ட் மாதம் 09ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 2020 ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி 2188/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டு இலங்கை ஜனாநாயக சோசலிசக் குடியரசின் பிரதமராக கௌரவ மஹிந்த ராஜபக்ஷவும்,

- ☐ அரசியலமைப்பின் 43 (2) மற்றும் 44(1) சரத்துக்களுக்கு அமைய 2020 ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 2020 ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி 2188/42ஆம் இலக்க மற்றும் 2188/43ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டு அமைச்சுக்கள் இராஜாங்க அமைச்சுக்கள் உள்ளடங்கிய அமைச்சரவை,

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி அதிமேதகு கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால் நியமிக்கப்பட்டது.

**2020 ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை**
அரசியலமைப்பின் 99 (அ) சரத்தின் கீழ் ஒன்பதாவது பாராளுமன்றத்திற்காக தேசியப் பட்டியலின் ஊடாகத் தெரிவுசெய்யப்பட வேண்டிய 29 உறுப்பினர்களில் மேலும் 08 உறுப்பினர்களின் பெயர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் 2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி 2188/46 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டது.

**2020 ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி வியாழக்கிழமை**
ஆரசியலமைப்பின் 70வது சரத்துக்கு அமைய புதிய ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வை முற்பகல் 9.30 மணிக்குக் கூட்டுமாறு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி அதிமேதகு கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் 2020 ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி 2188/39ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டார்.

## ஒன்பதாவது பாராளுமன்றம்

- ☐ சபாநாயகர் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்களும்,

- ☐ பிரதி சபாநாயகர் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ரஞ்சித் சியம்பலாபிட்டிய அவர்களும்,







என அழைக்கப்படும் சட்டமூலம் நீதி அமைச்சர் கௌரவ அலி சப்ரி அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**2020 ஒக்டோபர் 20ஆம் திகதி வியாழக்கிழமை**
அரசியலமைப்பின் 121வது சரத்துக்கு அமைய உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்ட, **“20வது அரசியலமைப்புத் திருத்தம்”** என அழைக்கப்படும் சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்மானம் பாராளுமன்ற சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்களால் அறிவிக்கப்பட்டது.

அன்றையதினம் 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலங்கள் இரண்டு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் முன்வைக்கப்பட்டன.

**2020 ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதி புதன்கிழமை மற்றும் 22ஆம் திகதி வியாழக்கிழமை**
இருபதாவது அரசியலமைப்புத் திருத்தம் என அழைக்கப்படும் சட்டமூலம் இரண்டு நாள் விவாதத்தின் பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இரண்டாவது வாசிப்பு மற்றும் மூன்றாவது வாசிப்புக்கு ஆதரவாக 156 வாக்குகளும் எதிராக 65வாக்குகளுமாக வாக்கெடுப்பு மேலதிக வாக்குகளால் திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில்

- ☐ குழுக்களின் பிரதித் தவிசாளர் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அங்கஜன் இராமநாதன் அவர்களும்

பாராளுமன்றத்தினால் தெரிவுசெய்யப்பட்டனர்


- ☐ சபை முதல்வர் பதவிக்கு கௌரவ தினேஷ் குணவர்தன அவர்களும்,
- ☐ ஆளும் கட்சியின் முதற்கோலாசான் பதவிக்கு கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து அவர்களும் நியமிக்கப்பட்டிருப்பதாகவும்,
- ☐ எதிர்க்கட்சித் தலைவராக கௌரவ சஜித் பிரேமதாச அவர்கள் பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுவதாகவும்

பாராளுமன்றத்தின் சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்களால் அறிவிக்கப்பட்டது.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி அதிமேதகு கோட்டாபய ராஜபக்ஷ அவர்களால் பிற்பகல் 3.00 மணிக்கு அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

**2020 செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை**
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் தொடர்பான அனுதாபப் பிரேரணை மீதான விவாதம் நடத்தி பூர்த்திசெய்யப்பட்டது.

**2020 செப்டெம்பர் 22ஆம் திகதி வியாழக்கிழமை**
அரசியலமைப்பைத் திருத்துவதற்கான, “இருபதாவது அரசியலமைப்புத் திருத்தம்”



நிறைவேற்றப்பட்டது.

**2020 நவம்பர் மாதம் 12ஆம் திகதி வியாழக்கிழமை**
2020ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

**2020 நவம்பர் மாதம் 17ஆம் திகதி வியாழக்கிழமை**
2021ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு (வரவுசெலவுத்திட்ட உரை) பிற்பகல் 1.40 மணிக்கு ஜனநாயக சோசலிசக் குடியரசின் பிரதமரும் நிதியமைச்சருமான கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

**2020 நவம்பர் மாதம் 18ஆம் திகதி புதன்கிழமை**
முதல் டிசம்பர் மாதம் 10ஆம் திகதி வியாழக்கிழமை வரை 2021ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு மற்றும் குழுநிலை விவாதம் மூன்று சனிக்கிழமைகள் உள்ளடங்கலான தினங்களில் இடம்பெற்றது.
2020 நவம்பர் மாதம் 21ஆம் திகதி வியாழக்கிழமை இரண்டாவது வாசிப்புக்கு ஆதரவாக 151 வாக்குகளும், எதிராக 52 வாக்குகளும் அளிக்கப்பட்டன.
2020 டிசம்பர் மாதம் 10ஆம் திகதி வியாழக்கிழமை மூன்றாவது வாசிப்புக்கு ஆதரவாக 151 வாக்குகளும் எதிராக 54 வாக்குகளும் அளிக்கப்பட்டு மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

2020 டிசம்பர் மாதம் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை அரசியலமைப்பின் 99 (அ) சரத்துக்கு அமைய ஒன்பதாவது பாராளுமன்றத்துக்குத் தேசியப் பட்டியல் ஊடாகத் தெரிவுசெய்யப்பட்ட வேண்டிய 29வது உறுப்பினர்களில் மற்றுமொரு உறுப்பினராக கௌரவ சங்கைக்குரிய அத்துரலிய ரத்ன தேரரின் பெயர், 2020 டிசம்பர் மாதம் 18ஆம் திகதி 2206/22ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரினால் வெளியிடப்பட்டது.

இதற்கு மேலதிகமாக இந்தக் காலப்பகுதியில் எட்டாவது பாராளுமன்றத்தின் சட்டமூலம் ஒன்றும், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஆறு சட்டமூலங்களும் நிறைவேற்றப்பட்டு, சபாநாயகரினால் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டன. எட்டாவது பாராளுமன்றம் 2020 மார்ச் மாதம் 02ஆம் திகதி கலைக்கப்படுவதற்கு முன்னர் 14 தினங்களும், ஒன்பதாவது பாராளுமன்றம் 2020 ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை 44 பாராளுமன்ற அமர்வு தினங்களும் சட்டவாக்க செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.



**எச்.ஈ. ஜனகந்த சில்வா**
*உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)*
*பாராளுமன்ற சட்டவாக்க சேவைகள் திணைக்களம்*

செய்தி

# அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு இரு புதிய உறுப்பினர்கள்





அரசாங்க நிதி பற்றிய குழுவின் புதிய உறுப்பினர்களாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம மற்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயகார ஆகியோர் நியமிக்கப்பட்டிருப்பதாக கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் அறிவித்தார்.

இக்குழுவின் உறுப்பினர்களாகச் செயற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கௌவர சமிந்த விஜயசிறி மற்றும் கௌரவ ஹேஷா விதானகே ஆகியோர் இராஜினாமாச் செய்த பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு தெரிவுக் குழுவினால் பரிந்துரைக்கப்படட புதிய உறுப்பினர்கள் இருவருடைய பெயரையே சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

சிறப்புக் கட்டுரை

# இளமையான பெண் உறுப்பினர்
# தமரா குமாரி இலங்கரத்ன

"உழைப்பை திருடுவது பாவமாகும். உழைக்கும் ஏழை மக்களை ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் முதலாளி வர்க்கத்தினரின் பிடியிலிருந்து பாதுகாப்போம்"

\- தமரா குமாரி இலங்கரத்ன -



***இளமையான பெண் உறுப்பினராக அரசியலில் தனது பெயரைப் பதித்த தமரா குமாரி அழுதெனிய, கேகாலை வேரகே கிராமத்தில் 1925 மார்ச் 15 இல் பிறந்தார். பி.பீ. அழுதெனிய அவர்களின் புதல்வியான அவருக்கு நான்கு சகோதர சகோதரிகள் இருந்தனர். அரச ஏழுதுவினைஞரான தனது தந்தை பணியாற்றிய கம்பளை பகுதியில் தனது இளமை காலத்தைக் களித்தார். பின்னர் சிரேஷ்ட பாடநெறி சன்றிதழை பெற்றுக்கொண்ட அவர் கம்பளை செயின்ட் ஜோசப் கான்வென்ட் கல்லூரியில் தங்கியிருந்து கல்வி கற்றார்.***

தந்தையின் யோசனைக்கு அமைய 1944 செப்டம்பர் 04 ஆம் திகதி டிகிரி பண்டா இலங்கரத்ன அவர்கள் தமரா குமாரி அழுதெனியவை இரு குடும்பத்தினரதும் ஆசிர்வாதத்துடன் மணமுடித்தார். சோஷலிச கொள்கையில் விருப்புக் கொண்ட டிகிரி பண்டா இலங்கரத்ன அரசங்க ஏழுதுவினைஞர் சங்கத்தின் தலைமை பதவியை வகித்தார்.



1947 இல் இடம்பெற்ற ஐ.தே.க. அரசுக்கு எதிரான பாரிய வேலைநிறுத்த போராட்டத்துக்கு தலைமை தாங்கியதன் பிரதிபலனாக டீ.பி. உள்ளிட்ட சிலர் தொழிலை இழந்தனர். அதனை அடுத்து சுயாதீன சோஷலிச வேட்பாளராக கண்டியிலிருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட இலங்கரத்ன அவர்கள் 1948 மே 18 இல் பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து வெற்றிகரமான அரசியல்வாதியாக தனது பயணத்தை ஆரம்பித்தார். இலங்கரத்ன அவர்கள் ஊழியர் சேமலாப நிதியம், தேசிய வங்கி மற்றும் இலங்கையில் தொழிலாளர் தினத்தை ஆரம்பிப்பதில் முன்னோடியாக இருந்தார். இலங்கரத்ன அவர்களுக்கு எதிராக விசாரணை செய்யப்பட்ட மனுவொன்று காரணமாக பாராளுமன்ற உறுப்புரிமை மற்றும் பிரஜாவுரிமையை இழந்தார். 1986 ஏப்ரல் 12 ஆம் திகதி கண்டி தொகுதியை இழந்ததை அடுத்து அவருக்கு அரசியலிலிருந்து விடைபெற நேரிட்டது.

இடைத்தேர்தலில் கண்டி தொகுதியில் போட்டியிட தமரா குமாரி இலங்கரத்ன தகுதியானவர் அல்ல என்று ஆரம்பத்தில் இடதுசாரியினரின் கருத்தாக இருந்தது. அது மட்டுமல்லாமல் தமராவுக்கு எதிராக தேர்தல் ஆட்சேபனை மனுவொன்றும் நிர்மாணிக்கப்பட்டது. அது பல்வேறு குற்றச்சாட்டுக்களை கொண்டமைந்தது. பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட கணவன் அரசியல் பணிகளில் பங்குகொண்டமை கடுமையான குற்றச்சாட்டாக இருந்ததுடன், அந்த விடயங்களை உறுதிப்படுத்த புகைப்பட ஆதாரங்களுடன் சட்டத்தரணிகளின் வாத விவாதங்களுக்கு மத்தியில் தேர்தல் ஆட்சேபனை மனுவை மறுக்க வேண்டியிருந்தது.

1949 ஜூன் 18 ஆம் திகதி இடம்பெற்ற இடைத்தேர்தலில் நட்சத்திர சின்னத்தில் போட்டியிட்ட தமரா குமாரி இலங்கரத்ன அவர்கள் 10,062 வாக்குகள் (மொத்த வாக்குகளில் 50.75%) பெற்றுக்கொண்டதுடன் மேலதிக 2056 வாக்குகளால் சோல்பரி பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட மூன்றாவது பெண் பாராளுமன்ற உறுப்பினராக இடைத்தேர்தலில் வெற்றிபெற்றார்.

இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய அட்லின் மொலமுரே, குசுமா குணவர்தன மற்றும் தமரா குமாரி இலங்கரத்ன ஆகிய மூவரினதும் பாராளுமன்ற பிரவேசத்தில் அவர்களின் குடும்ப பின்னணி அல்லது கணவர்மாரின் அரசியல் பலம் சக்திவாய்ந்ததாக காணப்பட்டது. கிராமிய இலங்கை பெண்களுக்காக அன்று தமரா குமாரி இலங்கரத்ன "தமது நாட்டை காக்க தமராவுக்கு வாக்களிப்போம்" எனும் தொனிப்பொருளில் முன்வந்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் ஆரம்ப கட்டத்தில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து கட்சியை மக்கள் மயப்படுத்த நடவடிக்கை எடுத்த அவர் அந்த கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய இடதுசாரி கொள்கையுடையவராக இருந்தார். அவர் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியை உருவாக்கும் போது அதன் ஒரேயொரு பெண் இணைப்பாளர், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் முதலாவது ஆரம்பகட்ட பெண் அங்கத்தவர், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் முதலாவது பெண் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையாருக்கு முன்னர் ஸ்ரீ லங்கா

சுதந்திர கட்சியின் பெண்கள் சம்மேளனத்தின் முதலாவது தலைவியாக, சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்த முதலாவது பெண் உறுப்பினராக திகழ்ந்ததுடன் ஆளுநர் பதவிக்கு பிரேரிக்கப்பட்ட இந்நாட்டின் முதலாவது பெண்ணாவார். எனினும் இளமையான ஒருவருக்கு அந்த ஆளுநர் பதவியை வழங்குமாறு அந்த கோரிக்கையை கௌரவமாக மறுத்துவிட்டார்.




ஒரு பெண்ணாக அரசியலில் உயர்ந்து சீனா, கொரியா, இந்தியா, சிலி மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு இலங்கை பெண்களின் அபிமானத்தை கொண்டுசென்ற வீரப்பெண்மணியாகவே தமரா குமாரி கருதப்படுகிறார். உலகின் முதல் பெண் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அரசியலுக்கு வருவதற்கு முன்னர் 1948 - 1949 ஆண்டில், 25 வயதுடைய தமரா குமாரி இலங்கரத்ன பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்கு மற்றும் அப்போதைய ஏகாதிபத்திய கட்சிகளுக்கு எதிராக பெண் உறுப்பினராக இலங்கை பாராளுமன்றத்தில் கண்டி தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தி சுயாதீன சோஷலிச பாட்டாளி வகுதியினரின் முதலாவது பெண் உறுப்பினராகவும் தலைவியாகவும் இலங்கை வரலாற்றில் பதியப்படுகிறார்.




இலங்கையின் இரண்டாவது பொதுத் தேர்தல் 1952 மே மாதம் 24, 26, 28 மற்றும் 30 ஆம் திகதிகளில் நடந்ததுடன் தமரா, குடை சின்னத்தில் கண்டி தொகுதியில் போட்டியிட்டார். அதன்போது அவரின் எதிர்தரப்பாளராக ஐக்கிய தேசிய கட்சியின் பிரபல அங்கத்தவர் ஈ.எல். சேனாநாயக்க போட்டியிட்டார். 1952 ஆம் ஆண்டு இரண்டாவது பொதுத் தேர்தலில் அவருக்கு தனது தொகுதியை தக்கவைத்துக்கொள்ள முடியாமல் போனதுடன், இலங்கரத்னவின் 7644 வாக்குகளை விட அதிகமாக 11349 வாக்குகளை பெற்ற ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் முன்னிலையில் தோல்வியுற்றார்.

அரசியலுக்கு பிரவேசிப்பது தொடர்பில் அவரது குடும்பத்தினர் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டனர். அப்போது குழந்தைப்பேறு பெற்ற தாயாக இருந்த அவர் கணவரினதும் கட்சியினதும் கௌரவத்துக்காக அரசியலில் ஈடுபட்டார். அவர் உணர்ச்சிபூர்வமான தைரியமான பெண்ணாக இருந்ததுடன் அன்பான தாயாகவும் இருந்தார். பாராளுமன்ற உறுப்பினரான பின்னரும் அவர் தனது குடும்பம் மற்றும் அரசியலுக்கிடையில் சமநிலையாக இருந்தார்.



எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்கள், ஏகாதிபத்திய, பாட்டாளி வர்க்கத்தினருக்கு எதிரான ஐக்கிய தேசிய கட்சியின் பலமான அமைச்சு பதவியை வகிக்கும் போது, டீ.பி. இலங்கரத்ன மற்றும் தமரா குமாரி இலங்கரத்ன ஆகியோர் ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக சுயாதீன சோஷலிச உறுப்பினர்களாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துமளவுக்கு முற்போக்காகவும், ஐக்கிய தேசிய கட்சிக்கு விரோதமாகவும் இருந்தனர். அதற்கமைய அவர் 1952 வரை பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தினார்.

சந்தியா, ரோஹிணி, உபேக்ஷா மற்றும் உதய ஆகிய நான்கு பிள்ளைகளின் அன்பான தாயான அவருக்குப் பின்னர் அவரது குடும்பத்திலிருந்து எவரும் அரசியலுக்கு பிரவேசிக்கவில்லை. 1998 இல் இலங்கை ஜனாதிபதியினால் வழங்கப்படும் தேஷமான்ய விருதை தமரா குமாரி இலங்கரத்ன பெற்றுக்கொண்டார்.

செய்தி

# வெளிநாட்டு பணியாளர்களை மீண்டும் இந்நாட்டிற்கு அழைத்துவர வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடமுள்ள நிதியத்தை பயன்படுத்தவும் - கோப் குழு



கொவிட் தொற்றுநோய் காரணமாக பதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பணியாளர்களை மீண்டும் இந்நாட்டிற்கு அழைத்துவர வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடமுள்ள நிதியத்தை பயன்படுத்த முடியுமா என்பது தொடர்பில் கண்டறியுமாறு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறையின் தற்போதைய நிலைமையை ஆராயும் விசேட கணக்காய்வு அறிக்கையை விசாரணை செய்வதற்கு கோப் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தலைமையில் கூடிய போதே அந்த அறிவுறுத்தலை வழங்கியது.

கொவிட் தொற்றுநோய் காரணமாக பல்வேறு நாடுகளில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் வெளிநாட்டு பணியாளர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் சேகரித்துள்ள 14 பில்லியன் ரூபாய் நிதியத்தை பயன்படுத்தி மீண்டும் இந்நாட்டிற்கு அழைத்துவருவதில் சட்டரீதியான தடைகள் உள்ளனவா என்பது தொடர்பில் குழு விசாரணை செய்தது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்துள்ள வெளிநாட்டு பணியாளர்களை இந்த நிதியத்தை பயன்படுத்தி மீண்டும் நாட்டுக்கு அழைத்துவர எந்த தடையும் இல்லை என பணியகத்தின் தலைவர் இதன்போது வெளிப்படுத்தினார்.

மத்திய கிழக்கில் எண்ணெய் விலை வீழ்ச்சி மற்றும் கொவிட் தொற்றுநோய் காரணமாக தொழிலை இழந்த 34,723 பணியாளர்கள் தங்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவருமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். கொவிட் தொற்றுக்கு மத்தியில் நாட்டை மீண்டும் திறப்பதற்கான கலந்துரையாடல் இடம்பெற்றுவரும் நிலையிலும் தற்பொழுதும் விமான நிலையம் திறக்கப்பட்டுள்ள நிலையிலும் இவ்வாறு நாடு திரும்புவதற்கு கோரிக்கை விடுத்துள்ள வெளிநாட்டு பணியாளர்கள் குறித்து கண்டறிவதற்கு பணியகத்தினால் பொருத்தமான மாதிரியொன்று உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் கோப் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

2019 ஆம் ஆண்டில் மாத்திரம் வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களில் பணியாற்றும் இலங்கை அதிகாரிகளுக்கு 800 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது தெரியவந்ததுடன், இவ்வளவு பாரிய தொகையை செலவுசெய்து பராமரிக்கப்படும் ஊழியர்களால் எதிர்பார்க்கப்படும் சேவைகள் வழங்கப்படுகின்றதா என்பதை கண்டறிய வேண்டுமென கோப் குழு, அதிகாரிகளுக்கு அறிவித்தது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரங்களில் பணியாற்றுவதற்கு அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்யும் போது முறையான ஒரு செயன்முறை பின்பற்றப்பட வேண்டும் என கோப் குழு அறிவித்ததுடன், அவ்வாறு செயற்படாததால் கடந்த காலங்களில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது. அதற்கான பொருத்தமான ஆட்சேர்ப்பு முறையொன்றுக்கு முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதியை பெற்றுக்கொள்ளுமாறும் அமைச்சின் செயலாளருக்கு குழு அறிவுறுத்தியது.

இந்தக்கூட்டத்தில் அமைச்சர்களான மஹிந்த அமரவீர, அஜித் நிவாட் கப்ரால், இந்திக்க அனுருத்த, பாராளுமன்ற உறுப்பினர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க, நளீன் பண்டார, இரான் விக்கிரமரத்ன மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு, திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள் கலந்துகொண்டனர்.



சிறப்புக் கட்டுரை

# ஜோ பைடன் ; மாறுபட்ட கதைகளும் பல சாவல்களும்



கொரோனா தொற்றுநோய்க்கு மத்தியில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உலக நாடுகளின் பெரும் எதிர்ப்பார்ப்பிற்கு மத்தியில் நடந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் அனைவரினதும் கவனத்தை ஈர்த்திருந்தது. ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் குடியரசுக் கட்சிக்காகவும், ஜோ பைடன் ஜனநாயகக் கட்சிக்காகவும் போட்டியிட்டனர்.

மிகவும் அனுபவம்மிக்க அரசியல்வாதியான ஜோ பைடன் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் காலத்தில் துணை ஜனாதிபதியாக எட்டு ஆண்டுகள் பணியாற்றினார். இரண்டாம் உலகப் யுத்தக் காலப்பகுதியில் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த பிரதேசமான பென்சில்வேனியாவில் 1942ஆம் ஆண்டில் பிறந்தார். அவரது குடும்பத்திலுள்ள நான்கு குழந்தைகளில் இவர் மூத்தவராவார்.

திறமையான கல்வியாளர் மற்றும் விளையாட்டு வீரரான பைடன் டெலாவேர் பல்கலைக்கழகத்தில் வரலாறு மற்றும் அரசியல் விஞ்ஞானத் துறையில் பட்டம் பெற்றார். இவர் தனது கல்வியை 'Syracuse' எனப்படும் சட்டக்கல்லூரியில் தொடர்ந்தார்.

தனது பாடசாலைக் காலத்திலும் குடும்பத்திலும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் மன உறுதியோடு தனது வாழ்வை நகர்த்தி சென்றார். ஜோ பைடன் செனட் சபையில் அங்கம் வகித்த மிகவும் வயது குறைந்த உறுப்பினராகத் திகழ்ந்தார். இக்காலப்பகுதியில் தனது மனைவி மற்றும் இளைய மகள் ஆகியோர் ஒரு கார் விபத்தில் இறந்ததால்



பெரும் மன அழுத்தத்திற்கு உள்ளானார். ஆனால் ஒரு மன தைரியமிக்க தந்தையாக தனது அரசியல் வாழ்க்கையைத் தொடர முயன்றார்.

1987 ஆம் ஆண்டு பைடனின் வாழ்வில் முக்கியமானதொரு திருப்பு முனையை ஏற்படுத்திய வருடமாகும். அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு போட்டியிட தீர்மானித்து தனது பெயரை வழங்கியிருந்தாலும் பின்னர் தனக்கு ஏற்பட்ட பெரும் சர்ச்சைக்கு மத்தியில் அவரது பெயரை போட்டியிலிருந்து திரும்பப் பெற்றுக்கொண்டார். 2008ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட பைடன் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்திருந்தாலும் 2008ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23ஆம் திகதி பராக் ஒபாமா அவரை தனது துணை ஜனாதிபதி வேட்பாளராக அறிமுகப்படுத்தினார். இது பைடனின் வாழ்க்கையை வேறு திசையில் கொண்டு சென்றதோடு இருவருக்கும் இடையேயான நல்லுறவு தொடர்ந்தது.

பைடன் பெரும்பாலும் ஒபாமாவை "சகோதரர்" என்றே அழைத்தார். அதன்பின்னர் நாட்டின் குடிமகனுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த விருதான "சுதந்திரத்திற்கான ஜனாதிபதி விருது" பைடனுக்கு வழங்கப்பட்டது. இதன்போது பராக் ஒபாமா தெரிவிக்கையில், அனைவருக்கும் சமமாக அன்பை வழங்கக்கூடியவரும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பாற்பட்டு நாட்டுக்காக சேவை செய்பவரும் தனது வாழ்க்கையை முழுமையாக இந்நாட்டுக்காக அர்ப்பணித்தவர் என்று தெரிவித்திருந்தார்.



பைடனின் மூத்த மகன் பியூ பைடன் புற்றுநோயால் 2016ஆம் ஆண்டு தனது 46 வது வயதில் இறந்தார். இது பைடனின் வாழ்க்கையில் ஏற்பட்ட மற்றொரு சோகமாகும். அப்போதிலிருந்து புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர் பல உதவிகளை வழங்கிவருகின்றார். அதன்பின்னர், அரசியலில் இருந்து ஒதுங்கி சிறு ஓய்வை எடுத்துக்கொண்டு 2020 ஆம் ஆண்டில் ஜனாதிபதிப் போட்டிக்குத் திரும்பினார். ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்தின் மீது முழு நம்பிக்கை கொண்டவராக புதிய நம்பிக்கையுடன் தேர்தல் களத்தில் களமிறங்கியிருந்தார். ஜனாதிபதி டிரம்புடன் கடைசியாக தொலைக்காட்சியில் உரையாடிய பைடனின் உரை அமெரிக்கர்களுக்கு புதிய பல நம்பிக்கையைத் தந்தது. இது பைடனின் முழுமையான வெற்றியை உறுதிப்படுத்தியது.


கொவிட் நோய்த்தொற்று தொடர்பாக பிரதான இரு ஜனாதிபதி வேட்பாளர்களிடையே காரசாரமான விவாதங்களும் பிளவுகளும் ஏற்பட்டிருந்த போதிலும் பைடன் காலநிலை மாற்றம், புவி வெப்பமடைதல் போன்ற பிரச்சினைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தியிருந்தார். மேலும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் மாத்திரம் கவனம் செலுத்தாது சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தி உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்திருந்தார். அதே நேரத்தில், முஸ்லிம்கள் மற்றும் கறுப்பின அமெரிக்கர்களின் உரிமைகளுக்கான குரல்கொடுக்கும் கமலா ஹரிஸை துணைத் தலைவராக தேர்ந்தெடுத்து டிரம்பின் கடும் போக்கிற்கு எதிரான ஒரு பாதையை தேர்ந்தெடுத்து தனது குறிக்கோளை தெளிவுப்படுத்தியிருந்தார். பெரும் சந்தேகத்தின் மத்தியில், 270 க்கும் மேற்பட்ட தேர்தல் தொகுதிகளில் வெற்றிபெற்று அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் வரலாற்றில் அதிக எண்ணிக்கையிலான விருப்பு வாக்குகளினடிப்படையில் வெற்றிபெற்று சாதனைப் படைத்திருந்தார்.

தேர்தலுக்கு பின்னர் NBC News செய்திப்பிரிவிற்கு வழங்கிய தனது முதலாவது நேர்காணலில், தான் எதிர்கொண்ட சவால்கள் “தனித்துவமானது” என்று பைடன் விவரித்தார். அமெரிக்காவின் ஜனாதிபதியாக வருவது ஒரு “கௌரவம்” என்றும், “தடைகளை எதிர்கொண்டு அமெரிக்கர்கள் தங்கள் வாக்குகளை அளித்ததாகவும், அமெரிக்காவின் இதயத் துடிப்பான ஜனநாயகம் எதிரொலிப்பதாகவும் அதனை தாழ்மையுடன் ஏற்றுக்கொள்கின்றேன்” என்றும் ஜோ பைடன் தெரிவித்திருந்தார்.

“கோபத்தையும் தாழ்வுமனப்பான்மையையும் ஒதுக்கி வைத்துவிட்டு, காயங்களுக்கு மருந்தளித்து ஒரே தேசமாக ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது என ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டபோது ஜோ பைடன் தெரிவித்திருந்தார். எதிர்காலம் கடினமானது என்றாலும், தனக்கு வாக்களிக்காத அமெரிக்க மக்களுக்கும் தலைவராக தொடர்ந்து செயற்படுவேன் என்றும் அவர் ட்வீட் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஒருமுறை ஈராக் போருக்கு ஆதரவாக வாக்களித்த பைடன் தான் தவறு செய்ததாக தாழ்மையுடன் ஒப்புக் கொண்டதோடு ஒரு தலைவராக நாட்டுக்கு முன்னோடியாக விளங்கினார். மேலும் தனது 78ஆவது வயதில் இந்த குறிப்பிடத்தக்க வெற்றியை பெற்றிருந்தமை சிறப்பம்சமாகும்.

வாழ்க்கையில் வெற்றிபெற வயது ஒரு தடையல்ல என்றும், பல சவால்கள், தோல்விகளை எதிர்கொண்டிருந்தாலும் முயற்சி இருந்தால் ஒரு நாள் வெற்றிபெற முடியும் என்பதே ஜோ பைடன் வாழ்க்கை நமக்கு தரும் படிப்பினையாகும். ஜனவரி 20 ஆம் திகதி அமெரிக்காவின் ஜனாதிபதியாக உத்தியோகபூர்வமாக பதவியேற்றுக்கொண்ட ஜோ பைடனின் வெற்றி இலகுவில் அடைந்துவிட முடியாத மாபெரும் வெற்றி என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர். அமெரிக்காவின் உபஜனாதிபதி கமலா ஹரிஸ் தொடர்பான கட்டுரையை அடுத்த இதழில் எதிர்பாருங்கள்

*நிபுனி பலகமகே*
*பொதுச்சேவை அதிகாரி*
*தொடர்பாடல் திணைக்களம்*



செய்தி

# இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2020ஆம் ஆண்டில் 300 மில்லியன் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணியை சேமித்துள்ளது – கோப் குழுவில் வெளிப்பட்டது





இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2020ஆம் ஆண்டில் 300 மில்லியன் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணியை சேமித்திருப்பதாக அதன் தலைவர் சுமித் விஜேசிங்ஹ கோப் குழுவில் தெரிவித்தார். இலங்கையில் பெற்றோலியத்தை களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை குறித்து ஆராய்வதற்கு கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் தலைமையில் கோப் குழு கூடியபோதே இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் இந்தத் தகவலை முன்வைத்தார்.

விசேடமாக கடந்த வருடத்தில் மசகு எண்ணெய் பரல் ஒன்றின் விலை வீழ்ச்சியடைந்தமை மற்றும் வேறு சில காரணங்களால் இதன் நன்மைகளை அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ள முடிந்ததாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

மசகு எண்ணெயின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியால் அரசாங்கத்துக்குக் கிடைத்த இலாபம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் கோப் குழுவில் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, மஹிந்த அமரவீர, இந்திக அனுருத்த, பாராளுமன்ற உறுப்பினர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க, அனுரகுமார திஸாநாயக்க, நளின் பண்டார, இரான் விக்ரமரட்ன, பிரேம்நாத் சி.தொலவத்த, எஸ்.எம்.மரிக்கார், சாணக்கியன் இராசமாணிக்கம் மற்றும் பார்வையாளர் உறுப்பினராக இசுறு தொடங்கொட ஆகியோரும் கோப் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை பகுதிகளில் உள்ள எரிபொருள் தாங்கிகளை இலங்கை பெற்றோலியக் கூட்டத்தாபனத்தின் தேவைக்குப் பயன்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பிலும் கோப் குழு கவனம் செலுத்தியது.

அத்துடன், முன்னைய இருப்புக்களைவிட மேலதிகமாக எரிபொருளை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான வசதிகளை விஸ்தரிக்கும் நோக்கில் கொலன்னாவை மற்றும் முத்துராஜவல முனையங்களின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். இது தொடர்பில் சாத்தியக்கூற்று ஆய்வொன்றை நடத்தி அதுபற்றிய அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கோப் குழுவின் தலைவர் பணிப்புரை விடுத்தார்.

# ஒரே இணைப்பு, ஒரே பாதை திட்டம்

## எதிர்ப்பார்ப்புமிக்க சீனாவின் புதிய பட்டுப்பாதை






சீனாவின் புதிய பட்டுப்பாதை என அழைக்கப்படும் “ஒரே இணைப்பு, ஒரே பாதை” (One Belt - One Road Initiative) திட்டமானது இதுவரைகாலமும் இல்லாத வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மிகவும் பரந்த உட்கமைப்பு திட்டமாவதோடு உலக பொருளாதாரம் மற்றும் அரசியல் ரீதியாக பாரிய திருப்புமுனைகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு திட்டமாகும். 2013 ஆம் ஆண்டில் சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங் (Xi Jinping) இத்திட்டம் தொடர்பில் உலகுக்கு அறிமுகப்படுத்துவதுடன், 2015ஆம் ஆண்டில் இத்திட்டம் கருத்தியல் ரீதியாக உலகுக்குக் கொண்டுவரப்பட்டது.

உலக மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினரை இணைக்கும் வகையில் 65 நாடுகளை உள்ளடக்கியதாக நிலம் மற்றும் கடல் மார்க்கமான இணைப்பை பிரதான குறிக்கோளாக இத்திட்டம் கொண்டுள்ளது.

ஆனாலும் ஒரே இணைப்பு, ஒரே பாதை திட்டமானது உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதியதொரு திட்டமல்ல. புராதன காலத்திலிருந்து சீனா வர்த்தக நடவடிக்கைகளுக்காகவும் ஏனைய விடயங்களுக்காகவும் எல்லைகடந்து நாடுகாண் தொடர்பை பேணிவந்துள்ளது. 1000 ஆண்டுகளுக்கும் மேலாக சீன - இந்திய பெருங்கடலில் அமைந்துள்ள நாடுகளோடு சீனா வர்த்தக தொடர்பை பேணிப் பாதுகாத்து வந்துள்ளதோடு குறித்த பட்டுப்பாதையை தங்களது வர்த்தக நோக்கங்களுக்காக நாடுகளும் பயன்படுத்திக் கொண்டன. அதனடிப்படையில் ஆசியா, ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பா ஆகியவை தங்களது பிரதான பட்டுப்பாதையாக பயன்படுத்திக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. குறித்த பாதையை மேலும் வலுப்படுத்தி புதிய பட்டுப்பாதை அபிவிருத்தி திட்டத்தை சீனா புதுப்பித்துள்ளது.




சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங் அவர்களின் ஒரே இணைப்பு, ஒரே பாதை திட்டத்தில் உள்ளடங்கியுள்ள பிரதான விடயங்களை ஐந்தாக வரையறுக்கலாம் அவையாவன.

1. கொள்கை ஒருங்கிணைப்பின் (Policy Coordination) அடிப்படையில் நாடுகளுக்கிடையில் தொடர்பினை ஏற்படுத்தல்

2. வசதியிணைப்பின் (Facility connectivity) அடிப்படையில் ஆசிய, ஐரோப்பிய மற்றும் ஆபிரிக்க கண்டங்களுக்கு இடையில் ஒத்துழைப்பை உருவாக்குவதன்மூலம் உலகளாவிய சுதந்திர வர்த்தக ஆட்சி மற்றும் திறந்த உலக பொருளாதாரத்தின் அடிப்படையில்




வர்த்தக-முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குதல்.

3. நிதிசார் இணைப்புகளை (Financial integration) உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை செய்தல். அனைத்து பரிமாணங்கள் மற்றும் நிதி ஒத்துழைப்பு ஆகியவற்றில் பல நீடித்த மற்றும் ஒருங்கிணைந்த நிதி இணைப்புக்களை உருவாக்குதல்

4. ஆழ்ந்த வர்த்தக உறவுகளை (Trade deepening) கட்டியெழுப்புவதோடு, வேலைவாய்ப்புகளையும், திறந்த வேலைவாய்ப்பு பொருளாதாரத்தில் பயனுள்ள ஒழுங்குமுறை வழிமுறைகளையும் உருவாக்குவதில் குறைந்தபட்ச வர்த்தக தடைகள் மூலம் குறித்த பிராந்தியங்களில் சந்தைதிறனை அதிகரித்து விடுவதன் மூலம் முதலீடு மற்றும் நுகர்வு ஆகியவற்றை ஊக்குவித்தல்

5. கலாச்சார இணைப்பினூடாக (Cultural integration) கல்வி பரிமாற்றங்கள், தனிப்பட்ட பரிமாற்றங்கள், சுற்றுலாத்துறை ஆகியவற்றில் இளைஞர்கள், பெண்கள் மற்றும் மக்களுக்கிடையிலான இடைத்தொடர்பை அதிகரித்தல்.

அதன்படி, ஜனாதிபதி ஜின்பிங்கின் ஒரே இணைப்பு ஒரே பாதை திட்டம் தொடர்பில் உலக நாடுகளின் கவனம் ஈர்க்கப்பட்டதுடன் பிரதான பேசுபொருளாகவும் அமைந்தது. எதிர்வரும் காலங்களில் இத்திட்டம் பெரும்பாலான அரசுகளுக்கு மிகவும் முக்கியமானதும் தீர்மானம்மிக்கதுமாக மாறும் என்பதில் சந்தேகமில்லை.


## ஆசிரியர் குழாம்

*ஆலோசனை*

திரு. தம்மிக தஸநாயக்க (பாராளுமன்ற செயலாளர் நாயகம்)

திருமதி. குஷானி ரோஹனதீர (பிரதிச் செயலாளர் நாயகம், பணியாட்தொகுதி பிரதானி)

திரு. டிகிரி கே.ஜயதிலக (உதவிச் செயலாளர் நாயகம்)

எண்ணக்கரு மற்றும் வழிகாட்டல்

திரு. ஷான் விஜேதுங்க

*தொகுப்பு*

புத்தினி ராமநாயக்க
எதிரிவீர குணசேகர
நிம்மி ஹாத்தியல்தெனிய

*மொழிபெயர்ப்பு*

எம்.பிரசாத்
ஏ.ஜீ.எம்.எம்.நுஸ்கி
பா.ருத்ரகுமார்

*புகைப்படம்*

நுவன் துமிந்த

*பக்கவடிவமைப்பு*

இஷாரா விக்ரமசிங்ஹ

*இணையம் ஊடாக விநியோகம்*

ஏ.ஜீ.எம்.எம்.நுஸ்கி

# அதிகாரிகள் தகவல்



**செல்வி. ஐ.தட்சனராணி**
உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)
சட்டமூல அலுவலகம்

பண்டாரவளை பெண்கள் உயர்நிலைப் பாடசாலை மற்றும் பண்டாரவளை தமிழ் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் ஆரம்பக் கல்வியைக் கற்ற செல்வி. ஜி. தட்சனராணி அவர்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வணிகவியல் பட்டதாரியாவார். இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டக் கல்வியை நிறைவுசெய்த இவர் சட்டத்தரணியாகவும் விளங்குகின்றார். அதுமட்டுமல்லாது களனிப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் அறிவியல் பிரிவில் முதுகலை பட்டமும் பெற்றவராவார்.

மேலும், செல்வி. ஜி. தட்சனராணி அவர்கள் அரசியலமைப்பு சட்டம் தொடர்பான டிப்ளோமா பாடநெறியை நிறைவுசெய்துள்ளதோடு பாராளுமன்ற நடைமுறைகள் தொடர்பான டிப்ளோமா கற்கையையும் நிறைவுசெய்துள்ளார்.

இலங்கைப் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பல செயலமர்வுகளிலும் இவர் பங்கேற்றுள்ளார். இந்திய பாராளுமன்ற ஆய்வுகள் மற்றும் பயிற்சிப் பிரிவினால் ஒழுங்கமைக்கப்பட்ட சட்ட வரைவு பயிற்சிநெறியில் இவர் பங்கெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

1991ஆம் ஆண்டில் இலங்கை பாராளுமன்றத்துடன் இணைந்த செல்வி. ஜி. தட்சனராணி அவர்கள் தற்போது பாராளுமன்ற சட்டமூல அலுவலகத்தில் உதவிப் பணிப்பாளராக கடமையாற்றுகின்றார். 30 வருடத்திற்கும் மேலான பாராளுமன்ற சேவைக்காலத்தை இவர் கொண்டுள்ளார்.




**திருமதி. சியாமா பர்னாந்து**
உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)
மனித வள அபிவிருத்தி திணைக்களம்

அம்பலாங்கொட தர்மாஷோக வித்தியாலயத்தின் ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்த சியாமா பர்னாந்து ருஹுனு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பட்டப்படிப்பை நிறைவு செய்தார். திறந்த பல்கழைக்கழகத்தில் சட்டக் கல்வியை நிறைவுசெய்த இவர் 2006 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக பதவிப்பிரமாணம் செய்துக்கொண்டார்.

1991 அம் ஆண்டு பாராளுமன்றத்தில் சேவையாற்ற இணைந்த சியாமா பர்னாந்து அவர்கள் பாராளுமன்ற சட்டமூல அலுவலகம், அமைச்சரவை ஆலோசனைக் குழு அலுவலகம் (ஆலோசனைக்குழு அலுவலகம்), நிதி மற்றும் வழங்கல்கள் அலுவலகம், பொது மனுக்கள் தொடர்பான குழு அலுவலகம், சேவை வழங்கல் அலுவலகம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சேவை அலுவலகம் போன்ற பல பிரிவுகளில் சேவையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சியாமா பர்னாந்து தற்போது பாராளுமன்ற மனிதவள அபிவிருத்தி திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளராக சேவையாற்றுகின்றார். 30 வருடத்திற்கும் மேலான பாராளுமன்ற சேவைக்காலத்தை இவர் கொண்டுள்ளார்.



**திருமதி. நிஷாந்தி சமரசிங்க விக்கிரமரத்ன**
உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)
அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு அலுவலகம்

கொழும்பு மியுசியஸ் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை கற்ற நிஷாந்தி சமரசிங்க விக்கிரமரத்ன அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிகவியல் (சிறப்பு) பட்டத்தை பெற்றவராவார்.

1991 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி பாராளுமன்ற சேவையில் இணைந்துக்கொண்ட இவர் ஆலோசனைக்குழு, நிதி மற்றும் வழங்கல் திணைக்களம், பாராளுமன்ற உறுப்பினர் சேவை அலுவலகம், அரசாங்க கணக்குகள் குழு மற்றும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழு அலுவலகம் உள்ளிட்ட பலவற்றில் சேவையாற்றியுள்ளமை விசேட அம்சமாகும்.

தற்போது அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளராகவும் குறித்த குழுவின் செயலாளராகவும் பணியாற்றி வருகின்றார். 30 வருடத்திற்கும் மேலான பாராளுமன்ற சேவைக்காலத்தை இவர் கொண்டுள்ளார்.

# புகைப்படத் தொகுப்பு

புத்தாண்டில் ஆசி பெறும்போது...







கொரியாவுடன் நட்புறவைப் பலப்படுத்தும் சபாநாயகர்




சங்கைக்குரிய அத்துரலிய ரத்ன தேரர் பதவிச் சத்தியம் செய்த







தொடர்பாடல் திணைக்களம்,
இலங்கை பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர,
கோட்டே

தொலைபேசி : +94 11 2777100
தொலைநகல் : +94 11 2777227

Parliament of Sri Lanka

@ParliamentLK

@slparliament

Parliament of Sri Lanka